## DEPOSITION OF WITNESS

IN THE COURT OF I ADDL.DISTRICT & SESSIONS JUDGE, THOOTHUKUDI.

Case No. S.C.No. 136/2021.
Prosecution witness for P.W. 17 .

| | | | |
|---|---|---|---|
| Name | ... திருமதி. கலா. | Caste | ... |
| Father's/Husband Name | ... | Calling | ... |
| Village | ... | Religion | ... |
| Taluk | ... | Age | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 03.07.2026.

Accused absent. 317 Crpc petition filed.

<u>முதல் விசாரணை</u>

நான் தற்போது தென்காசி மாவட்டம் ஆழ்வார்குறிச்சி காவல்நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணியில் இருந்து வருகிறேன். நான் இதற்கு முன்பு எட்டையபுரம் காவல்நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணியில் இருந்தபோது 23.12.2020 அன்று இரவு 23.15 மணியளவில் நிலைய குற்ற எண் 322/2020 இதச 294(பி), 302 பிரிவின் படி அ.சா.14 உதவி ஆய்வாளர் அ.சா.ஆ 14 வழக்கு பதிவு செய்து வைத்திருந்தார். அ.சா.1 நிலையம் ஆஜராகி கொடுத்த புகாரின் அடிப்படையில் அ.சா.14 வழக்கு தாக்கல் செய்தார். அந்த புகார் **அ.சா.ஆ 24**. அன்றே நான் சம்பவ இடத்தில் இருந்தபோது அ.சா.14 சம்பவ இடத்திற்கு வந்து வழக்கின் நகலை கொடுத்தார். நான் சம்பவ இடமான குளத்துவாய்பட்டி நடுத்தெருவில் உள்ள அ.சா.1ன் வீட்டின் முன்பாக சம்பவ இடத்தை அ.சா.2, அசா.7 ஆகியோர் முன்னிலையில் தெரு மின்விளக்கு மற்றும் வீட்டு மின் விளக்கு வெளிச்சத்தில் பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் வரைபடம் தயார் செய்தேன். அந்த பார்வை மகஜர் ஏற்கனவே குறியீடு செய்யப்பட்ட அ.சா.ஆ 6. அந்த வரைபடம் **அ.சா.ஆ 25**. 24.12.2020 அன்று அதிகாலை 00.30 மணியளவில் அதே சாட்சிகள்

முன்னிலையில் சம்பவ இடத்திலிருந்து ரத்தம்படிந்த உலக்கை, ரத்தம்பட்ட மற்றும் ரத்தம்படாத சிமெண்ட் தரை துண்டுகளையும் மகஜரில் கைப்பற்றி சாட்சிகளிடம் கையொப்பம் பெற்றேன். அந்த கைப்பற்றுதல் மகஜர் ஏற்கனவே குறியீடு செய்யப்பட்ட அ.சா.ஆ 7. சம்பவ இடத்திலிருந்த இறந்துபோன மோகன்ராஜ் என்பவரின் பிரேதத்தை கோவில்பட்டி அரசு மருத்துவமனைக்கு தலைமை காவலர் கனகராஜ் மூலமாக பிணவறையில் வைக்க வேண்டுகோள் கடிதத்துடன் அனுப்பினேன். பிறகு சம்பவ இடத்தில் அசா.1, அ.சா.2, அசா.3, அ.சா.7, அ.சா.4 ஆகியோரை விசாரித்து வாக்குமூலங்கள் பதிவு செய்தேன். 24.12.2020 அன்று காலை 6.30 மணியளவில் மேற்படி மருத்துவமனை பிணவறையில் வைத்து பஞ்சாயத்தார் முன்னிலையில் பிரேத விசாரணை செய்து அறிக்கை தயாரித்தேன். அந்த அறிக்கை **அ.சா.ஆ 26**. பிறகு பிரேதத்தை பிரேத பரிசோதனைக்காக தலைமை காவலர் கனகராஜ் மூலம் வேண்டுகோள் கடிதத்துடன் மருத்துவரிடம் அனுப்பினேன். அந்த கடிதம் **அ.சா.ஆ 27**. பிறகு பஞ்சாயத்தார்களை சாட்சிகளாக விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். 24.12.2020 அன்று காலை சுமார் 10 மணியளவில் குளத்துவாய்பட்டி சேமியா கம்பெனி அருகில் உள்ள மோகன்ராஜ் என்பவரின் தோட்டத்தில் வைத்து எதிரியை சாட்சிகளான அ.சா.5 மற்றும் அவரது உதவியாளரான சிவக்குமார் ஆகியோர் முன்னிலையில் கைது செய்து விசாரித்தபோது ஆஜர் எதிரி தானாக முன்வந்துகொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை சாட்சிகள் முன்னிலையில் பதிவு செய்து சாட்சிகளிடம் கையொப்பம் பெற்றேன். அதன் அனுமதிக்கப்பட்ட பகுதி ஏற்கனவே குறியீடு செய்யப்பட்ட அ.சா.ஆ 4. அதன் அடிப்படையில் அதே தோட்டத்தில் எதிரி மறைத்து வைத்திருந்த ரத்தக்கறை படிந்த கருநீலநிற முழுக்கை சட்டை, வெள்ளை நிற சாரம் ஆகியவற்றை ஆஜர் செய்ததை

அதே சாட்சிகள் முன்னிலையில் மகஜரில் கைப்பற்றி சாட்சிகளிடம் கையொப்பம் பெற்றேன். அந்த கைப்பற்றுதல் மகஜர் ஏற்கனவே குறியீடு செய்யப்பட்ட அ.சா.ஆ 5. மேற்படி சட்டை மற்றும் சாரம் ஏற்கனவே குறியீடு செய்யப்பட்ட சா.பொ.1 மற்றும் 2. எதிரிக்கும் காயங்கள் இருந்ததால் மருத்துவ குறிப்பாணை கொடுத்து கோவில்பட்டி மருத்துவமனைக்கு அனுப்பினேன். சிகிச்சை முடிந்த பிறகு 24.12.2020 அன்று எதிரியை நீதித்துறை பாதுகாப்பில் வைக்க ஏற்பாடு செய்தேன். எதிரி மருத்துவ பரிசோதனையில் ஏற்கனவே மனநிலை சரியில்லாதவர் என்று தெரியவந்ததால் அவர் தூத்துக்குடி அரசு மருத்துவமனைக்கு மேல் சிகிச்சைக்காக பரிந்துரைக்கப்பட்டார். எதிரி தூத்துக்குடி அரசு மருத்துவமனையில் உள்நோயாளியாக சிகிச்சையில் இருந்ததால் என் வேண்டுகோள் கடிதத்தின்படி நீதித்துறை நடுவர் மருத்துவமனைக்கு வந்து எதிரியை நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தினார். 26.12.2020 அன்று எதிரிக்கு சிகிச்சை அளித்த அ.சா.8 மருத்துவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து அ.சா.ஆ 8 விபத்து பதிவேட்டு நகல் பெற்றேன். 29.12.2020 அன்று பிரேத பரிசோதனை சமயத்தில் ரத்தமாதிரியை சேகரித்து ஆய்வகத்திற்கு அனுப்ப நீதித்துறை நடுவர் எண் 2 க்கு வேண்டுகோள் கடிதம் கொடுத்தேன். அந்த கடிதம் ஏற்கனவே குறியீடு செய்யப்பட்ட அ.சா.ஆ 20. 04.01.2021 அன்று இறந்துபோனவரின் பிரேதத்திலிருந்து எடுக்கப்பட்ட ரத்தக்கறை படிந்த உடைகளையும், சம்பவ இடத்திலிருந்து கைப்பற்றப்பட்ட வழக்கு சொத்துக்களையும் மேற்படி நீதிமன்றத்தில் ஒப்படைத்து PR.No.1/2021 என்று எண்ணிடப்பட்டது.அதற்கான படிவங்கள் 91 ஏற்கனவே குறியீடு செய்யப்பட்ட அ.சா.ஆ 11 வரிசை (எண்ணிக்கையில் 3), 07.01.2021 அன்று மேற்படி நீதித்துறை நடுவரின் உத்தரவு பெற்று தலைமை காவலர் கனகராஜ் மூலம் வழக்கு சொத்துக்களையும்,

உள்ளுறுப்புகளையும் ரசாயன பரிசோதனைக்காக திருநெல்வேலி வட்டார தடய அறிவியல் ஆய்வகத்திற்கு அனுப்பினேன். 11.01.2021 அன்று வழக்கில் கைப்பற்றப்பட்ட இறந்துபோனவரின் உடைகளையும், சம்பவ இடத்திலிருந்து கைப்பற்றப்பட்ட தடயங்களையும் ரசாயன பகுப்பாய்விற்கு அனுப்ப மேற்படி நீதித்துறை நடுவருக்கு நான் கொடுத்த வேண்டுகோள் கடிதம் ஏற்கனவே குறியீடு செய்யப்பட்ட அ.சா.ஆ 20. 08.01.2021 அன்று அ.சா.8 மருத்துவரை மீண்டும் விசாரித்து மறுவாக்குமூலம் பதிவு செய்தேன். அ.சா.ஆ 9 பிரேத பரிசோதனை அறிக்கை பெற்றேன். 19.01.2021 அன்று இறந்துபோனவரின் உடைகளையும், சம்பவ இடத்திலிருந்து கைப்பற்றப்பட்ட தடயங்களையும் மேற்படி தலைமை காவலர் கனகராஜ் மூலம் திருநெல்வேலி வட்டார தடய அறிவியல் ஆய்வகத்திற்கு அனுப்பினேன். 10.02.2021 அன்று தலைமை காவலர் கனகராஜ் என்பவரை மீண்டும் விசாரித்து மறுவாக்குமூலம் பதிவு செய்தேன். 14.02.2021 அன்று வழக்கு சொத்துக்களை அ.சா.16 தலைமை காவலர் மேற்படி ஆய்வகத்திலிருந்து பெற்றும், அன்றைய தினம் நேரமாகிவிட்டதால் நீதிமன்றத்தில் ஒப்படைக்க முடியாததால் மறுநாள் தலைமை காவலரான அ.சா.13 மூலம் நீதிமன்றத்தில் ஒப்படைத்தேன். 18.02.2021 அன்று சாட்சிகள் அ.சா.16, அ.சா.13, மேற்படி நீதிமன்றத்தின் தலைமை எழுத்தரான அ.சா.11 ஆகியோரை விசாரித்து வாக்குமூலங்கள் பதிவு செய்தேன். 19.02.2021 அன்று அ.சா.15 உதவி இயக்குநர் மற்றும் துணை இயக்குநர் விஜயலதா ஆகியோரை விசாரித்து வாக்குமூலங்கள் பதிவு செய்தேன். 22.02.2021 அன்று அ.சா.9, 10 மருத்துவர்கள் மற்றும் டேவிட் என்ற மருத்துவர் ஆகியோரை விசாரித்து வாக்குமூலங்கள் பதிவு செய்தேன். மருத்துவ அறிக்கைகள் பெற்றேன். பிறகு இவ்வழக்கில் விசாரணையை முடித்து எதிரிமீது இறுதியறிக்கை தாக்கல் செய்ய மாதிரி

அறிக்கை தயாரித்து குற்ற வழக்கு தொடர்பு துணை இயக்குநருக்கு அனுப்பினேன். பின்னிட்டு நான் பணியிட மாற்றம் செய்யப்பட்டேன். பின்னிட்டு எனக்கு பின்னால் வந்த ஆய்வாளரான திரு. ஜின்னா பீர் முகமது சட்டக் கருத்துரை பெற்று இதச 294(பி), 302 பிரிவுகள் படி எதிரிமீது இறுதியறிக்கை தாக்கல் செய்தார். என் புலன் விசாரணையில் சாட்சிகள் என்னிடம் சொன்னதைதான் நான் வாக்குமூலங்களாக பதிவு செய்தேன்.

குறுக்கு விசாரணை

நான் சொன்ன நேரத்திலும், சொன்ன விதத்திலும் அ.சா.1 எந்த புகாரும் கொடுக்கவில்லை என்றும், எதிரியும் கைது செய்யப்படவில்லை என்றும், எதிரி ஒப்புதல் வாக்குமூலமும் கொடுக்கவில்லை என்றும், நானும் எந்த பொருளையும் கைப்பற்றவில்லை என்றும், நான் நிலையத்திலேயே அமர்ந்து கொண்டு புலன் விசாரணை செய்யாமல் ஆவணங்களையும், வழக்கு சொத்துக்களையும் உருவாக்கியிருக்கிறேன் என்றும், எனக்கு பின்னால் வந்த ஆய்வாளரும் புலன் விசாரணை செய்யாமல் எதிரிமீது தவறான இறுதியறிக்கை தாக்கல் செய்துள்ளார் என்றும், எதிரிக்கும், இந்த வழக்கிற்கும் சம்பந்தமில்லை என்றும் சொன்னால் சரியல்ல. எதிரி தூத்துக்குடி அரசு மருத்துவமனையிலிருந்து சென்னை கீழ்பாக்கம் மனநோய் மருத்துவமனைக்கு பரிந்துரைக்கப்பட்டு அங்கு மூன்று வாரங்கள் சிகிச்சை அளிக்கப்பட்டு பிறகுதான் நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தப்பட்டார் என்றால் சரிதான். தூத்துக்குடி அரசு மருத்துவமனையிலிருந்து எதிரி கீழ்ப்பாக்கம் மருத்துவமனைக்கு பரிந்துரைக்கப்பட்டார் என்றால் சரிதான். இந்த வழக்கில் உண்மையான எதிரியை கண்டுபிடிக்க முடியாத நிலையில் வழக்கை முடிப்பதற்காக எதிரியை இந்த வழக்கில் தவறாக சேர்த்து தவறான இறுதியறிக்கை

தயாரிக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. இந்த வழக்கில் அ.சா.5 மற்றும் 6 எங்கள் கையிருப்பு சாட்சி என்றால் சரியல்ல. என் புலன் விசாரணை ஒருதலைபட்சமானது என்றால் சரியல்ல.

Taken down before me in open court, in the presence of the Accused read over to the witness and admitted by the deponent to be correct

MUNISWAMI THANDAVAN Digitally signed by MUNISWAMI THANDAVAN

I Additional District& Sessions Judge,
Thoothukudi.